மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.
அ.வ.எண்.69/2021

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கண்ணையன் | தொழில் | |
| தகப்பனார் பெயர் | வெங்கிடு | வகுப்பு | |
| வயது | | சமயம் | இந்து |
| நாள் | 19.09.2024 | கிராமம் | |
| சாட்சி | வா.சா.1 | | |

இன்று 19.09.2024 ஆம் தேதியன்று சாட்சி இந்நீதிமன்றம் வரவழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டார்.

உ.வி.மு.ச கட்டளை 18 விதி 17ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டதன் பேரில் வா.சா.1 மீண்டும் வரவழைக்கப்பட்டு, முதல் விசாரணை தொடர்ச்சி:-

என் தரப்பு சாட்சிய வாக்குமூலத்தை எழுத்து பூர்வ சாட்சிய வாக்குமூலமாக முதல் தரப்பு சாட்சிய விசாரணை வாக்குமூலம் கடந்த 08.01.2024ம் தேதியில் தாக்கல் செய்யப்பட்டு என் தரப்பில் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டன. பின்னிட்டு மீண்டும் கடந்த 21.02.2024ம் தேதியில் என் தரப்பில் வா.சா.ஆ.6 முதல் வா.சா.ஆ.9 வரையிலான ஆவணங்கள் கூடுதல் ஆவணங்களாக குறியீடு செய்யப்பட்டன. தற்போது என் தரப்பில் உ.வி.மு.ச கட்டளை 7 விதி 14(3)ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டதன் பேரில் **வா.சா.ஆ.10 முதல் வா.சா.ஆ.12 (Ex.A.10 to Ex.A.12)** வரையிலான ஆவணங்களாக குறியீடு செய்யப்படுகிறது. (வா.சா.ஆ.10 முதல் வா.சா.ஆ.11 வரையிலான ஆவணங்களின் நிரூபண மற்றும் தொடர்புடைமை குறித்து பிரதிவாதிகள் தரப்பில் ஆட்சேபிக்கப்பட்டு, பிரதிவாதிகள் தரப்பு ஆட்சேபனைக்குட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது.)

(பிரதிவாதிகள் தரப்பில் கேட்டுகொண்டதற்கிணங்க வா.சா.1ன் குறுக்கு விசாரணை வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது)

ஒம்/-திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.